**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 19.03.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 7 (LW8)

2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிச்சை சவரிமுத்து | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் வாகைவயல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி சௌந்தரராஜன் என்பவரை எனக்குத் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பங்களை நான் கடந்த 19.11.2023 ம் தேதியன்று, திருப்பாலைக்குடி காவல் நிலையத்திற்கு எனது சொந்தவேலையாக சென்றிருந்தபோது, போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள என்னுடைய 2 வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.5** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. **அத்தாட்சியில் உள்ள என்னுடைய 2 வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.6**

ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், அப்போது நான் கடந்த 19.11.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும் சாட்சி சௌந்தர்ராஜன் என்பவரும் எங்கள் ஊரில் உள்ள இறந்துபோன முனியசாமி வீட்டிற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அங்கு வந்த திருப்பாலைக்குடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் எங்கள் இருவர் முன்பாக சம்பவ இடத்தை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நான் சாட்சிக்கையொப்பம் செய்தேன் என்றும், அதே போல், அதே நாள் காலை 10.30 மணிக்கு முனியசாமி இறந்துகிடந்த வீட்டிற்குள் இரத்தம்பட்ட சிமெண்ட் தரைக்கல் ஒன்றையும், இரத்தம் படியாத சிமெண்ட் தரைக்கல் ஒன்றையும் ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியிலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, ஆஜர் எதிரி எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .